## NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **G.A.B Foundation donates RM 58,000 to local communities** |
| Publication : | **Makkal Osai, Malaysia** |
| Section : | **Business & Finance** |
| Page : | **7** |
| Date : | **21 January 2012** |

# உள்ளூர் சமூகங்களுக்கு கேப் அறநிறுவனம் வெ.58,000 நன்கொடை




புக்கிட் ராஜா தோட்டத் தமிழ்ப்பள்ளிக்கு நன்கொடை வழங்கப்படுகிறது. இடமிருந்து: கேப் அறநிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் ஓங் பிங் பிங், ரேனுகா இந்திராஜா, பள்ளியின் வாரிய இயக்குநர் வாரியத்தின் தலைவர் கருப்பையா, பள்ளியின் தலைமையாசிரியை அன்பரசி.



தீபாவளித் திருநாளை முன்னிட்டு அன்பளிப்பு வழங்கப்படுகிறது.

பெட்டாலிங் ஜெயா, ஜன. 21– கேப் ஃபவுண்டேஷன் அறநிறுவனம் தனது சமூக உணர்வு உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக 58 ஆயிரம் வெள்ளி மதிப்புடைய நன்கொடையை அண்மையில் வழங்கியுள்ளது.

கிள்ளானில் உள்ள புக்கிட் ராஜா தோட்டத் தமிழ்ப்பள்ளிக்கு பத்தாயிரம் வெள்ளி ரொக்கம், கணினிகளை அது நன்கொடையாக அளித்துள்ளது.

உள்ளூர் சமூகங்களின் மேம்பாட்டுக்கு தீவிரமாக பங்காற்றும் கேப் அறநிறுவனத்தின் முயற்சிகளில் ஒன்றாக விளங்கும் 'கம்யூனிட்டி' திட்டத்தின்கீழ் இந்த நன்கொடைகள் வழங்கப்பட்டன.

அந்த நன்கொடைகளைத் தவிர்த்து, ஈப்போவில் உள்ள ஸ்ரீபுத்ரி தேசிய பள்ளிக்கு கடந்த நவம்பர் 18 ஆயிரம் வெள்ளி மதிப்புடைய கணினிகளையும் அந்த அறநிறுவனம் நன்கொடை அளித்துள்ளது. கடுமையான புயல்மழையினால் அப்பள்ளியின் கணினி அறை மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அந்த நன்கொடை அளிக்கப்பட்டது.

அதே மாதத்தில், பெர்சத்துவான் வனித்தா சீனா பேரா எனும் நலச்சேவை அமைப்புக்கும் அந்த அறநிறுவனம் 15 ஆயிரம் வெள்ளி நன்கொடை அளித்தது. ஆதரவற்றோர், வசதியற்றோர் இல்லங்களுக்கு நிதிதிரட்டும் இயக்கத்தைத் தொடங்கியுள்ள அந்த நலச்சேவை அமைப்புக்கு உதவும் நோக்கத்தில் அந்த நன்கொடை அளிக்கப்பட்டது.

தங்கள் பங்காக சமூகத்திற்கு மீண்டும் ஆக்ககரமான முறையில் ஏதாவது செய்ய வேண்டும் என்பதே எங்களின் நோக்கமாக இருந்து வருகிறது. மலேசியர்களான தனி நபர்கள், சமூகத்தினரின் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஒளியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதை நாங்கள் எப்போதுமே சிந்தித்து வருகிறோம் என்று பாடாங் புக்கிட் ராஜா தோட்டத் தமிழ்ப்பள்ளியில் நடந்த நன்கொடை ஒப்படைப்பு நிகழ்வில் உரையாற்றிய போது கேப் அறநிறுவனத்தின் இயக்குநரான ரேனுகா இந்திராஜா தெரிவித்தார்.

அண்மைய தீபாவளித் திருநாளின்போதும், கேப் அறநிறுவனம், கல்வி ஆராய்ச்சி சங்கம் (ஏரா), பயனிட்டாளர் மலேசியா, கிராமப்புற பகுதிகளில் மனித வள மேம்பாடு (டோரா) ஆகியவற்றின் ஒத்துழைப்போடு பதினைந்தாயிரம் வெள்ளி மதிப்புடைய குடும்ப அத்தியாவசியப் பொருட்களை வசதியற்ற மக்களுக்கு வழங்கியது. தனித்துவாழும் தாய்மார்கள், வசதியற்றவர்கள் என 150 பேருக்கு அப்பொருட்கள் வழங்கப்பட்டன.

கேப் அறநிறுவனம் என்பது கின்னஸ் ஏங்கர் பெர்ஹாட் நிறுவனத்தின் நிறுவனச் சமூகப் பொறுப்புணர்வு அமைப்பாகும். 2007 ஆம் ஆண்டில் இது தோற்றுவிக்கப்பட்டது.